**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.182/2024 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நைனா முகம்மது | த–பெ | சாகுல் ஹமீது |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 56/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025**

-----------------------------------------------------------------------------------------------

**23.06.2025**
**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 22.04.2024–ம் தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கி, காரைக்குடி கிளை **காசோலை (காசோலை எண் 000142 அசல் ம.சா.ஆ.1) ஆகும்.** கடந்த 23.07.2024 ம் தேதியில் ம.சா.ஆ. 1 காசோலை stop payment என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 22.08.2024–ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ 3 ஆகு**ம். கடந்த 23.08.2024, மற்றும் 24.08.2024 ஆகிய தேதிகளில் புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் அசல் ம.சா.ஆ. 4** ஆகும். (எண்ணிக்கை –2) . கடந்த 22.03.2022 அன்று எதிரியும், புகார்தாரரும் செய்து கொண்ட **கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அசல் ம.சா.ஆ. 5 ஆகும்.** கடந்த 29.07.2022 அன்று எதிரி க்கும் அவரது மனைவி ஜாஸ்மின் ராணிக்கும் புகார்தாரர் செய்து கொடுத்த **கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 6** ஆகும். கடந்த 09.05.2024 எதிரிக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட **வழக்கறிஞர்**

**அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 7 ஆகும்.** கடந்த 11.05.2024 அன்று புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பு Addressee Left Instructions என்ற காரணம் கூறி **திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ. 8 ஆகும்.** கடந்த 11.05.2024 அன்று புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பு Unclaimed என்ற காரணம் கூறி திருப்பப்பட்ட **அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ. 9 ஆகும்.** மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.23 16:20:16 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)